பக்கங்கள் 21+3

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஐப்பசி 30 ஞாயிற்றுக்கிழமை 16.11.2025 | அதிர்வு 109

## தென் மாகாண ஆளுநர் பந்துல ஹரிச்சந்திர இன்று காலமானார்!



தென் மாகாண ஆளுநர் பந்துல ஹரிச்சந்திர திடீர் சுகவீனம் காரணமாகக் காலமானார்.

03▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்





# திருமலைக் கடற்கரையில் பௌத்த வணக்க ஸ்தலம் அனுமதியின்றி அமைப்பு!

## நேற்றிரவு முதல் முன்னெடுப்பு

திருகோணமலை கடற்கரையில் நேற்றிரவு முதல், அனுமதிபெறப்படாதபௌத்த வணக்கஸ்தலம் ஒன்றை அமைக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனினும், இன்று பகல் கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர மூலவளத் திணைக்களத்தின் தலையீட்டை அடுத்து பொலிஸாரினால் அந்த நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. ஆயினும் அதனையும் மீறி இன்றிரவு அந்த வேலைகள் தொடர்ந்து நடைபெறும் சாத்தியம் இருப்பதாகச் சில வட்டரங்கள் ஊகம் தெரிவித்தன.

02▶



# சலுகைக்காக அல்ல அநுர அரசின் கொள்கைக்காகவே எதிரணி மலையகத் தலைவர்கள் ஆதரவாக வாக்களிப்பு

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க பெருமிதம்

“எமது அரசியல் கொள்கை எவ்வளவு வலுவானது என்றால், எதிரணியில் மலையகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நான்கு தலைவர்கள் வரவு – செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். கடந்த காலங்களில் பதவி, சலுகைகள் வழங்கப்பட்டே ஆதரவாக வாக்கு பெறப்பட்டது. ஆனால், நாம் தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வை வழங்கி மலையக எம்.பிக்களின் ஆதரவைப் பெற்றோம்.”

03▶





# மரக்கிளை முறிந்து வீழ்ந்து ஒருவர் சாவு!

## பதுளையில் சோகம்

மரக்கிளை முறிந்து வீழ்ந்ததில் சம்பவ இடத்திலேயே ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தத் துயரச் சம்பவம் பதுளை – ஹாலி – எல, உடுவர பகுதியில் இன்று காலை இடம்பெற்றுள்ளது.

உடுவர பகுதியைச் சேர்ந்த 69 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

சடலம் பதுளை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஹாலி – எல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### திருமலைக் கடற்கரையில்...

திருகோணமலை மாநகர சபைக்கு உரித்தான கடற்கரைப் பகுதியில் ஏற்கனவே உள்ள அரசமரத்துடன் இணைந்த புத்தர் சிலை கட்டுமானத்தை அண்மித்து இந்த புதிய வணக்கஸ்தல கட்டுமானம் அமைக்கும் வேலைகள் திடீரென ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நேற்று நள்ளிரவில் இந்தக் கட்டுமான வேலைகள் ஒரு குழுவினரால் திடீரென ஆரம்பிக்கப்பட்டது. இன்று காலை இது தொடர்பில் அறிந்த கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர மூல வளத் திணைக்கள அதிகாரிகள் சம்பவ இடத்தைப் பார்வையிட்டனர். அப்போது அங்கு இழுபறி ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பின்னர் இது பற்றி திருகோணமலை துறைமுகப் பொலிஸ் நிலையத்தில் திணைக்கள அதிகாரிகள் முறைப்பாடு செய்தனர். அதன் பின்னர் பொலிஸார் அங்கு சென்று கட்டுமானப் பணிகளைத் தற்காலிகமாக இடைநிறுத்தப் பணித்தனர்.

எனினும், கட்டுமான வேலைகளை முன்னெடுத்தவர்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகளை நாளை பொலிஸார் நீதிமன்றம் மூலம் மேற்கொள்ளவுள்ளனர் என அறிய முடிகின்றது.

இதேவேளை, இந்தக் கடற்கரைப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த சட்ட அனுமதி அற்ற சிற்றூண்டிச்சாலையைக் கடந்த 5 ஆம் திகதி கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர மூலவளத் திணைக்கள அதிகாரிகள் அகற்றச் சென்ற போது அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, அந்தப் பகுதி பௌத்த பிக்குவால் கால அவகாசம் கோரப்பட்டிருந்தது. அந்த 7 நாள் கால அவகாசம் இன்று முடிவடைந்துள்ளது. அதன்படி நாளை சட்ட அனுமதியற்ற சிற்றூண்டிச்சாலை தமது திணைக்களத்தால் உடைத்து அகற்றப்படவுள்ளது எனக் கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர மூல வளங்கள் திணைக்கள அதிகாரிகள் கூறியுள்ளனர்.









# ரெலோவின் தலைவர் அடைக்கலநாதனைப் பொதுவெளியில் விமர்சித்த உறுப்பினர் ஒருவர் கட்சியிலிருந்து இடைநிறுத்தம்!

**(எஸ்.கீதபொன்கலன்)**

திருகோணமலையைச் சேர்ந்த தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) உறுப்பினரான பாக்கியராசா ஹான்ஸ் குமார், கட்சியின் தலைவரான நாடாளு மன்ற உறுப்பினர் செல்வம் அடைக் கலநாதனைப் பொதுவெளியில் படு மோசமாக விமர்சித்துக் குரல் பதிவுகளை வெளியிட்டமைக்காகக் கட்சியின் அடிப் படை உறுப்பினர் பதவியில் இருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளார்.

இவர் கட்சித் தலைமையையும் தலை மைக் குழு உறுப்பினர்கள் சிலரையும் கேவலமான முறையில் விமர்சித்துப் பொதுவெளியில் குரல் பதிவுகளை வெளியிட்டமைக்காக முதற்கட்ட ஒழுக் காற்று நடவடிக்கையாக அடிப்படை உறுப்புரிமையில் இருந்து தற்காலிக மாக நீக்கப்படுகின்றார் என்று கட்சி யின் செயலாளர் நாயகம் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) மேற்படி நபருக்கு நேற்று (15) கடிதம் மூலம் அறிவித்தல் விடுத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

“கட்சியின் தலைவர் குறித்து கடந்த சில வாரங்களாகப் பொது வெளியில்



பல்வேறு விமர்சனங்கள் முன்வைக் கப்பட்டு வருகின்றன. இது பற்றி தலை மைக் குழு நடவடிக்கைகளை முன்னெ டுக்கும் வேளையில் உங்களது குரல் பதிவின் மூலம் தலைவரையும், தலை மைக் குழு உறுப்பினர்கள் சிலரையும் படுமோசமாகவும், கேவலமாகவும் விமர் சித்து குரல் பதிவுகளை வெளியிட் டுள்ளீர்கள்.

இது விடயமாக கடந்த 9ஆம் திகதி நடைபெற்ற தலைமைக் குழு கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. அதனடிப்படையில் தலைமைக் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் தங்கள் மீது ஏன் ஒழுங்காற்று நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கு இன்றில் (15.11.2025) இருந்து இரண்டு வார காலத்துக்குள் தகுந்த விளக்கத்தை எழுத்து மூலம் அறியத் தரவும்.

தலைமைக் குழுவின் பரிசீலனைக் குப் பின் உங்களது விளக்கத்துக்கான பதில் அறியத்தரப்படும். அதுவரை நீங்கள் கட்சியின் சகல உறுப்புரிமை களில் இருந்தும் தற்காலிகமாக இடை நிறுத்தப்படுகின்றீர்கள் என்பதை அறியத் தருகின்றேன்.” – என்றுள்ளது.

இதேவேளை, ”எனக்கு லண்டனில் இருந்து சட்டத்தரணி ஒருவர் மேற்படி விடயம் தொடர்பில் தமது தரப்புக்கு மான நஷ்டம் ஏற்பட்டுள்ளது, இதற்காக மான நஷ்ட இழப்பீடாக 50 மில்லியன் ரூபா கோரி அறிவித்தல் ஒன்றை அனுப்பி யுள்ளார். மேலும் நான் பணியாற்றும் இடத்துக்கு இனந்தெரியாத சிலர் சென்று விசாரித்துள்ளார்கள். இதனால் உரிமை யாளர் பயத்தின் காரணமாக என்னை வேலையில் இருந்து நீக்கி விட்டார். இரவு வேளையில் நான் தங்கியிருக்கும் இடத்துக்கு மிக அருகாமையில் இனந் தெரியாத சிலர் மோட்டார் சைக்கிள்க ளில் வந்து செல்கின்றனர். இதனால் நான் உயிர் அச்சுறுத்தலுக்கு ஆளாகி யுள்ளேன். இது பற்றி நான் திருகோண மலை பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளேன்.” – என்று பாக்கியராசா ஹான்ஸ்குமார் கூறியுள்ளார்.



# வாகரையில் உருக்குலைந்த நிலையில் கரையொதுங்கிய ஆண் ஒருவரின் சடலம்

**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு, வாகரை பொலிஸ் பிரிவிலுள்ள காயங்கேணி கடற்கரை யில் உருக்குலைந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் கரையொதுங்கி யுள்ளது.

காயங்கேணி கடற்கரையில் நேற்று சனிக்கிழமை மாலை சடலம் ஒன்று கரை யொதுங்கிய நிலையில் கிடப்பதைக் கண்டு மீனவர்கள் வாகரைப் பொலிஸா ருக்குத் தெரியப்படுத்தினர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்குத் தடயவியல் பொலிஸ் பிரிவினர் சகிதம் சென்ற பொலிஸார், உருக்குலைந்த நிலையில் கிடந்த சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக வாழைச் சேனை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

இது தொடர்பான மேலதிக விசார ணைகளை வாகரைப் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**தென் மாகாண...**

நோய் நிலைமை காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலை யில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் இன்று உயிரிழந்துள்ளார்.

உயிரிழக்கும்போது அவருக்கு 62 வயதாகும்.

இவர் சிரேஷ்ட நிர்வாக அதிகாரி யாகவும் கடமையாற்றியுள்ளார்.

அத்துடன், அவர் அமைச்சுச் செய லாளர், மாவட்ட செயலாளர் மற்றும் பல அரச நிறுவனங்களின் தலை வர் பதவிகள் உட்படப் பல பதவிகளை வகித்துள்ளார்.

**சலுகைக்காக அல்ல...**

– இவ்வாறு அமைச்சர் பிமல் ரத் நாயக்க தெரிவித்தார்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் பங்காளிக் கட்சியான தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், பழனி திகாம்பரம் மற்றும் வி.இராதாகிருஷ்ணன் ஆகியோரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் எம்.பியும் வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்புக்கு ஆதரவாக வாக்க ளித்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்துரைக் கும்போதே அமைச்சர் பிமல் ரத்நாயக்க மேற்கண்டவாறு கூறினார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சிக்கனத் தலைவர்

1978ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட தற்போதைய அரசமைப்பின் கீழேயே நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமை நாட்டில் நடைமுறைக்கு வந்தது.

இந்த 47 ஆண்டுகளில் ஒன்பது ஜனாதிபதிகள் அதிகாரத்துக்கு வந்து விட்டார்கள். அந்த ஒன்பது பேரில் மிக எளிமையானவராக - தன்னுடைய பதவியின் மூலம் நாட்டுக்கும் அரசுக்கும் ஏற்படும் செலவினத்தை மிக சிக்கனமாக கையாளும் ஒருவராக - தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா மதிக்கப்படுகின்றார்.

எதிரணியில் இருந்து தமது கட்சியை அதிகாரத்துக்கு வரும் வகையில் கட்டி எழுப்பிய காலங்களில் ஜனாதிபதி பதவியில் இருப்போர், நாட்டின் பொருளாதாரத்தைச் சீரழிக்கும் வகையில் கண்மூடித்தனமாக - டாம்பீகமாக - செலவிட்டு, நாட்டுக்குப் பெரும் செலவினத்தை ஏற்படுத்தி வருகின்றனர் என்று குற்றஞ்சாட்டி வந்தவர் அநுரகுமார திஸநாயக்கா. அதன் காரணமாகவோ என்னவோ தான் பதவியேற்ற நாள் முதல் தமது எளிமையை வெளிப்படுத்தும் விதத்தில் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்.

அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தற்போதைய ஜனாதிபதியின் வெளிநாட்டுப் பயணச் செலவினங்களை இதற்கு முன்னர் ஜனாதிபதியாக இருந்த ரணில் விக்கிரமசிங்கவின் பயணச் செலவுகளுடன் ஒப்பிட்டு, விவரங்களை நாடாளுமன்றத்தில் வெளியிட்டிருக்கின்றார். அவை அநுரகுமார திஸநாயக்காவின் எளிமையை வெளிப்படுத்தி நிற்கின்றமை கவனிக்கத்தக்கது.

வழங்கப்பட்ட விவரங்களின் படி, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2022-2024 ஆம் ஆண்டில் 24 வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டார். அதில் மொத்தம் 385 பேர் பங்கேற்றனர். இந்தப் பயணங்களின் மொத்த செலவு 100 கோடி 73 லட்சத்து 46 ரூபா ஆகும்.

இதற்கு நேர்மாறாக, ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா, டிசம்பர் 2024 முதல் செப்டம்பர் 2025 வரை எட்டு வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டுள்ளார். இந்தப் பயணங்கள் - இந்தியா, சீனா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், வியட்நாம், ஜேர்மனி, மாலைதீவுகள் மற்றும் அமெரிக்கா, ஜப்பான் சுற்றுப் பயணம் என மொத்தம் ஒரு கோடி 49 லட்சம் ரூபா செலவில் உள்ளன என்று அமைச்சர் ஜெயதிஸ்ஸ மேலும் கூறினார்.

தமது உள்நாட்டுப் பயணங்களின் போதும் கூட தேவயற்ற ஆளணி மற்றும் வாகன அணிகளை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா தவிர்த்து வருகின்றார் என்பது கவனிக்கத்தக்கது.

தன்னுடைய அரசின் பிற பங்குதாரர்களுக்கு முன்னுதாரணமாக - நல்ல வழிகாட்டியாக - ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா செயற்படுகின்றார் என்பதை மெச்சத்தான் வேண்டும்.

இலங்கை அரசியலில் புதிய நிர்வாகக் கலாசாரத்துக்கான நல்வழிப்படுத்தலாக இதனைக் கொள்ளமுடியும்.

# மகர ஜோதி மண்டல பூஜையும் புனித தீர்த்த யாத்திரையும்

(மஸ்கெலியா நிருபர்)

அருள்மிகு ஸ்ரீசண்முகநாதன் சுவாமி தேவஸ்தான மஸ்கெலியா சபரிமலை ஸ்ரீஐயப்ப சுவாமிக்கு 32 ஆவது வருடம் யாத்திரை ஆரம்பமாகவுள்ளது.

நாளை (17) திங்கட்கிழமை ஆரம்ப மாகி தைப்பொங்கல் வரை 60 தினங் களுக்கு மகரஜோதி மண்டல பூஜை விழா நடைபெறவுள்ளது.

நாளை திங்கட்கிழமை காலை 6 .30 மணிக்கு திருப்பள்ளி எழுச்சி நடை திறத்தல், காலை 8.30 மணிக்கு விக்னேஸ்வர அபிஷேகம் காலை 10 மணிக்கு வையப்ப சாமிக்கு விசேட அபிஷேகம் காலை 11 மணிக்கு யாத் திரியர்களுக்கான விரதமாலை அணி தல் விசையை அலங்கார தீபாராதனை என்பன இடம்பெறும்.

இரவு 7 மணிக்கு 18 ஆம் படி பூஜை சரண கோஷ வழிபாடு இடம்பெறும். நிகழ்வில் இப்பகுதி வாழ் மக்கள் அனை வரையும் கலந்துக ஸ்ரீஐயப்ப சுவாமி யின் அருளை பெறுமாறு ஆலய பரி பாலன சபையினர் கேட்டுள்ளனர்.



# தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வில் நாதஸ்வரக் கச்சேரி

சந்நிதியான் ஆச்சிரம சைவக லைப் பண்பாட்டு பேரவையின் ஏற் பாட்டில், ஆச்சிரம முதல்வர் சாத னைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் “வேல் நாதம்” நாதஸ்வரக் கச்சேரி நாதமணி மதுசூதனால் நிகழ்த்தப்பட்டது.

கீபோட் - இசைக்கலைமணி நடேசு செல்வச்சந்திரன், ப்பாட். வித்துவான் அ.கேதீஸ், தபேலா - வித்துவான் மகேந்திரம் பிரபா ஆகிய அணி செய் கலைஞர்களுடன் இடம்பெற் றது.

நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை காலை இந்த நிகழ்வு ஆசி சிரமத்தில் இடம்பெற்றது.







# வடக்கில் நூலக சேவைகள் பணியகம் உருவாக்குவது தொடர்பில் கலந்தாய்வு

வடக்கு மாகாணத்தில் நூலக சேவைகள் பணியகம் ஒன்றை உருவாக்குவது தொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

தேசிய நூலக மற்றும் ஆவணவாக்கல் சேவைகள் சபையின் பணிப்பாளர் நாயகம் தலைமையிலான குழுவினர் ஆளுநரை சந்தித்து இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

இலங்கையின் சில மாகாணங்களில் ஏற்கனவே மாகாண மட்டத்திலான நூலக சேவைகள் பணியகங்கள் நிறுவப்பட்டுள்ளன. அதன் கீழ் மாவட்ட மட்டமும், பிரதேச செயலக மட்டமும் சார்ந்த நூலக சேவைகள் பணியகங்கள் செயல்பட்டு வருவதாகத் தெரிவித்தனர்.

அதேபோன்று மாகாண பொது நூலகம் மற்றும் மாவட்ட பொது நூலகங்களும் இதன் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன எனவும் ஆளுநருக்கு விளக்கினர்.

வடக்கு மாகாணத்தில் நூலக சேவைகள் பணியகம் உருவாக்கப்படும் என்ற யோசனையை ஆளுநர் வரவேற்று, அதற்குத் தேவையான ஒத்துழைப்புகள் வழங்கப்படும் என்று உறுதியளித்தார். இலத்திரனியல் நூலக சேவைகளை விரிவுபடுத்தவும், அதற்கான பயிற்சிகளை வழங்கவும் தேசிய நூலக மற்றும் ஆவணவாக்கல் சேவைகள் சபை எடுத்து வரும் முயற்சிகளுக்கு ஆளுநர் நன்றி தெரிவித்தார்.

அதேவேளை, புத்தக வெளியீட்டுக்கான உதவிகளைக் கோரி வடக்கு மாகாணத்தில் இருந்து கிடைக்கும் விண்ணப்பங்கள் குறைவாக உள்ளன என்ற தகவலை தேசிய நூலக மற்றும் ஆவணவாக்கல் சேவைகள் சபை முன்வைத்தது.

இதற்குப் பதிலளித்த ஆளுநர், உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக தேவையான விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என தெரிவித்தார்.

கலந்துரையாடலில் ஆளுநரின் செயலாளர், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், யாழ்ப்பாணம் பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் ஆளுநரின் உதவிச் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.









# மன்னார் இலுப்பைக் கடவை கடல் பகுதிக்குப் படையெடுத்த டொல்பின்!

## நேரடியாக பார்வையிட்டுக் குதூகலித்த மக்கள்

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இலுப்பைக் கடவை கடற்கரை பகுதியை நோக்கி நேற்று சனிக்கிழமை (16) மதியம் ஒரு தொகை டொல்பினகள் கூட்டமாக கடற் கரையை வந்தடைந்தன.

இந்த நிலையில் இதனை அறிந்த அப்பகுதி மீனவர்கள், பொது மக்கள், பெண்கள், சிறுவர்கள் சென்று பார்வை யிட்டதோடு, சிறுவர்களுடன் டொல்பின் மீன்கள் விளையாடியதை அவதானிக்க கூடியதாக இருந்தது.

டொல்பின் மீன் இனம் மன்னார் மாவட்டத்தில் கரையோர பகுதிக்கு கூட்டமாக வருகை தந்தமை இதுவே முதல் தடவையாகும்.

நீண்ட நேரம் இலுப்பை கடவை கடற் கரையோரங்களில் கூட்டமாக சுற்றி திரிந்த டொல்பின்களை ஆழ் கடலுக்குத் திருப்பி அனுப்ப மீனவர்கள் உதவினர்.

இந்த நிலையில் குறித்த டொல்பின் கள் மீண்டும் கூட்டமாக ஆழ்கடலை நோக்கிச் சென்றன.

# கிழக்கு பண்பாட்டலுவல்கள் திணைக்கள அனுசரணையில் முழு நிலாக் கலை விழா





(எஸ்.கீதபொன்கலன்)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் மூதூர் பிரதேச செயலகமும், அனாமிகா பண்பாட்டு மையமும் இணைந்து நடாத் திய “முழு நிலாக் கலை விழா” நேற்று சனிக்கிழமை மாலை மூதூர், சேனையூர் அனாமிகா பண்பாட்டு மையத்தில் இடம் பெற்றது.

சிலம்பாட்டம், நடனம், பாடல், கவிய ரங்கு ஆகிய பல்வேறு கலை நிகழ்வுகள் இதன்போது இடம்பெற்றன.

மூதூர் பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளர் றொசானா றஸீம் நிகழ்வில் முதன்மை அதிதியாக கலந்து கொண்டார்.

விசேட அதிதியாக மூதூர் பிரதேச செயலக கலாச்சார உத்தியோகத்தர் பசீர் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் கலை ஞர்கள் மற்றும் நலன் விரும்பிகள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



மதுஷாயினி மதிவதனன்,
ஊடக கற்கைகள் துறை.
யாழ்.பல்கலைக்கழகம்.

# இளைய தலைமுறையின் மோட்டார் சைக்கிள் மீதான மோகம்...!

இன்றைய யாழ்ப்பாணத்தின் தெருக்களில் வேகமாய் பாயும் மோட்டார் சைக்கிள்களின் ஒலியானது இளைய தலைமுறையின் புதிய கனவுகளையும் அதே சமயம் மறைந்த ஆபத்துகளையும் கொண்டு செல்கிறது. நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய வலுவான மோட்டார் சைக்கிள்கள் இளைஞர்களின் வாழ்க்கையில் பெருமையையும் பிரபலத்தையும் குறிக்கும் அடையாளமாக மாறியுள்ளது.

ஆனால் அந்த பெருமையின் பின்னால் ஒளிந்திருக்கும் அபாயங்களை பெரும்பாலானோர் கவனிக்க மறக்கின்றனர். யாழ் மாவட்டத்தில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் மோட்டார் சைக்கிள் விபத்துகள் பல குடும்பங்களில் துயரத்தின் குரலை எழுப்பி வருகின்றன. இளைஞர்கள் மத்தியில் உருவாகிவரும் இந்த மோட்டார் சைக்கிள் மீதான மோகம் இன்று சமூக பிரச்சினையாகவே மாறியுள்ளது.

மோட்டார் சைக்கிள் என்பது ஒரு காலத்தில் தேவைக்கேற்ப பயன்படும் போக்குவரத்துச் சாதனம் மட்டுமேயாகும். ஆனால் இன்றைய இளைஞர்களுக்கு அது பெருமை, அழகு, மரியாதை, சமூக நிலை ஆகியவற்றின் அடையாளமாக மாறியுள்ளது. புதிய மாடல், அதிக வலுவுடைய இன்ஜின், ஒலிமிக்க சிலிண்டர் இவைகள் அவர்களுக்கு ஒரு பெருமை உணர்வைத் தருகின்றன. அதிவேகத்தில் சாலையில் பாய்வது இன்றைய இளைஞர்களுக்கு ஒரு ஆபத்தான மகிழ்ச்சியாகும். பலர் சமூக வலைதளங்களில் வேகக் காட்சிகள், ஸ்டண்ட் வீடியோக்கள் பகிர்ந்து பெருமை கொள்ளும் நிலை காணப்படுகிறது. ஆனால் அந்த ஒரு கணத்தின் வேகமே பல குடும்பங்களின் வாழ்க்கையைத் துயரத்தில் ஆழ்த்துகிறது.

இன்றைய பெற்றோர்கள் தமது பிள்ளைகள் நவீன மோட்டார் சைக்கிள்களில் பயணிப்பதை பெருமையாக நினைக்கின்றனர். என் மகன் புதிய மாடல் பைக் வாங்கியிருக்கான் என்று பெருமையாகச் சொல்லும் பெற்றோர்கள் அதே வாகனம் ஒரு நாள் தங்கள் பிள்ளையின் உயிரை பறிக்கும் என்பதை சிந்திப்பதில்லை.

பல பெற்றோர்கள் தமது வருமானத்தைக் கடந்தும் லட்சக்கணக்கில் செலவழித்து மோட்டார் சைக்கிள் வாங்கி தருகின்றனர். சிலர் வங்கிகளில் லீசிங் கடன் எடுத்து அதிக வட்டி சுமையைச் சுமந்து பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுகின்றனர். ஆனால் இதனால் அவர்கள் தாமே தங்கள் பிள்ளைகளின் வாழ்க்கையில் எமனாக மாறுகின்றனர்.

இன்றைய பெற்றோர்கள், தமது பிள்ளைகள் நவீன மோட்டார் சைக்கிள்களில் பாய்வதை பெருமையாக கருதும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். சமூகத்தில் என் பிள்ளைக்கும் ஒரு வலுவான பைக் இருக்கிறது என்ற பெருமை உணர்வு அவர்கள் சிந்தனையையும் பொருளாதாரத்தையும் ஆக்கிரமித்து விடுகிறது. இந்த பெருமையின் பின்னால் ஒரு பெரும் பிழை பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வின்மை உள்ளது.

பிள்ளைகளுக்கு தேவையான நேரத்தில் முறையான சாரதி பயிற்சியும் நெறிமுறைகளும் வழங்காமல் நேரடியாக வாகனத்தை கையளிப்பது அவர்களின் உயிரையே ஆபத்துக்குள்ளாக்குகிறது. விபத்துகள் நேர்ந்தபின் மட்டும் அப்படி பண்ணியிருக்கக் கூடாது என்ற வருத்தம் எதையும் மாற்ற முடியாது. ஆகவே பெற்றோர்கள் பெருமையின் பெயரில் பிழை செய்வதை நிறுத்தி பிள்ளைகளின் பாதுகாப்பையும் பொறுப்பையும் முன்னிலைப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

யாழ்ப்பாணத்தின் வீதிகளில் ஒவ்வொரு நாளும் எழும் சைக்கிள்களின் சத்தமானது ஒரு புதிய துயரக் கதை பேசுகிறது. பெரும்பாலான விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்களாக இளம் வயதினர்தான் இடம்பெறுகின்றனர். குறிப்பாக மோட்டார் சைக்கிள் விபத்துகள் இன்று யாழின் அன்றாடச் சம்பவமாக மாறியுள்ளது. அதிவேகத்தில் செலுத்துதல் பாதுகாப்பு தலைகவசம் அணியாமை அனுபவமற்ற சாரதி பழக்கம் போன்ற காரணங்களால் உயிரிழப்புகள் அதிகரித்து வருகின்றன.

சில விபத்துகள் குடும்பத்தின் ஒரே ஆதாரமான இளைஞரை பறித்துச் செல்வதோடு அந்த குடும்பத்தை வாழ்நாள் முழுவதும் துயரத்தில் ஆழ்த்துகின்றன. ஒவ்வொரு விபத்தும் ஒரு பிழை அல்ல. அது ஒரு உயிரின் முடிவு. அதனைத் தடுக்கும் முயற்சி சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பினரின் பொறுப்பாக மாற வேண்டிய நேரம் இது. யாழில் மோட்டார் சைக்கிள் விபத்துகள் வெறும் புள்ளிவிவரமல்ல அது தினமும் உயிர்கள் அழியும் ஒரு நாளாந்த துயரம் ஆகும்.

நவீன மோட்டார் சைக்கிள்களை வாங்கும் பலர் நிதி நிறுவனங்களின் லீசிங் திட்டங்கள்

தொடர்ச்சி▼



# இளைய தலைமுறையின் மோட்டார் சைக்கிள் மீதான மோகம்...!

தொடர்ச்சி▲

மூலம் வாங்குகின்றனர். ஆரம்பத்தில் வசதியாகத் தோன்றும் இத்திட்டங்கள் பின்னர் பாரிய வட்டி சுமையால் குடும்பத்தைப் பெரும் நெருக்கடிக்கு உள்ளாக்குகின்றன. மாதாந்திர கட்டணங்களைச் செலுத்த முடியாமல் கடன் சுமையில் சிக்கிக்கொள்ளும் பெற்றோர்கள் பிள்ளைகளுக்காக வாங்கிய மோட்டார் சைக்கிள் தான் அவர்களுக்குத் துயரத்தின் காரணமாக மாறுவதை உணர்கிறார்கள். மகிழ்ச்சிக்காக வாங்கிய மோட்டார் சைக்கிள் ஒரு கணத்தில் உயிரை பறிக்கும் சாதனமாக மாறுகிறது என்பது பல குடும்பங்களின் உண்மையான அனுபவமாகியுள்ளது.

யாழ்ப்பாணத்தின் பிரதான சாலைகளில் அதிவேகமாக பயணிக்கும் மோட்டார் சைக்கிள்கள் சாலையின் கிளை வழிகளில் நுழையும் போது அல்லது கிளை சாலைகளில் இருந்து பிரதான சாலைக்கு வரும்போது அதிக விபத்துகள் ஏற்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் விபத்துகளில் 70 வீதத்துக்கும் மேற்பட்டவை மோட்டார் சைக்கிள் சார்ந்தவையாக உள்ளன. அதில் பெரும்பாலான மரணங்கள் இளைஞர்கள் (18–30 வயது) மத்தியில் இடம்பெறுகின்றன. விபத்துக்குப் பின்னர் பெற்றோர், நண்பர்கள், உறவினர்கள் அனைவரும் துயரத்தில் ஆழ்ந்தாலும் ஒரு கணம் நடந்த தவறால் இழந்த உயிர் திரும்பி வராது.

இளைஞர்கள் மோட்டார் சைக்கிள் மீதான மோகத்துக்கு பல காரணங்கள் உள்ளன. வேலைவாய்ப்பு குறைவு மற்றும் மன அழுத்தம் நண்பர்களிடையே போட்டி உணர்வு சமூக வலைதளங்களில் வேகம் ஸ்டைல் என்ற தவறான கருத்து பெற்றோரின் கட்டுப்பாடு இல்லாமை சாரதி பயிற்சி மற்றும் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு குறைவு இவை அனைத்தும் சேர்ந்து ஒரு ஆபத்தான கலாசாரத்தை அதாவது வேகம் என்பது பெருமை என்ற தவறான நம்பிக்கையை உருவாக்கியுள்ளன.

பல இளைஞர்கள் உரிய சாரதி பயிற்சி இல்லாமல் மோட்டார் சைக்கிள்களை இயக்கத் தொடங்குகின்றனர்.சிலர் சாரதி உரிமம் பெறாமல் சாலையில் பயணிக்கின்றனர். இது சட்டப்படி குற்றமாக இருப்பதோடு உயிர்க்கும் ஆபத்தானது. அதனால் சாரதி உரிமம் பெறுவதற்கு முன் பாதுகாப்பு பயிற்சி கட்டாயப்படுத்தப்பட வேண்டும். பள்ளிகளிலும் தொழில்நுட்ப கல்லூரிகளிலும் சாலை பாதுகாப்பு கல்வி சேர்க்கப்படுவது காலத்தின் தேவையாகும்.

விபத்துகளைத் தடுக்க அரசு மட்டுமல்ல சமூகமும் குடும்பமும் பங்கெடுக்க வேண்டும். பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு வாகனம் வாங்கித் தரும் முன் அவர்களின் பொறுப்புணர்வு நிலையைப் பரிசீலிக்க வேண்டும். இளைஞர்கள் பாதுகாப்பு ஹெல்மெட் அணியாமல் இரட்டை பயணிகளை ஏற்றிக் கொண்டு அதிவேகமாகச் செல்லும் பழக்கத்தை தவிர்க்க வேண்டும். பொலிஸ் துறையும் ஊடகங்களும் இணைந்து பாதுகாப்பு பிரசாரங்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்த வேண்டும்.

யாழ்ப்பாணத்தின் இளைய தலைமுறை இன்று வேகத்தின் மாயையில் மிதக்கிறது. ஆனால் அந்த வேகத்தின் வழி வாழ்வின் முடிவாக மாறக் கூடாது. உயிர் ஒருமுறை சென்றால் திரும்பி வராது ஆனால் ஒரு கணம் சிந்தித்தால் பல உயிர்கள் காப்பாற்றப்படலாம். மோட்டார் சைக்கிள் ஒரு பெருமையின் அடையாளமல்ல, அது ஒரு பொறுப்பு. அந்த பொறுப்பை உணர்ந்து ஓட்டினால் யாழின் இளைய தலைமுறை சாலையில் அல்ல வாழ்க்கையில் முன்னேறும்.

விபத்துகள் நேர்ந்தபின் மட்டும் அப்படி பண்ணியிருக்கக் கூடாது என்ற வருத்தம் எதையும் மாற்ற முடியாது. ஆகவே பெற்றோர்கள் பெருமையின் பெயரில் பிழை செய்வதை நிறுத்தி பிள்ளைகளின் பாதுகாப்பையும் பொறுப்பையும் முன்னிலைப்படுத்த வேண்டியது அவசியம். யாழ்ப்பாணத்தில் நடைபெறும் மோட்டார் சைக்கிள் விபத்துகள் நாள்தோறும் பல உயிர்களை பறித்து வருகின்றன.

உயிர் ஒரு கணத்தில் அழிகிறது ஆனால் அந்தத் துயரம் ஒரு குடும்பத்தை வாழ்நாளும் துன்புறுத்துகிறது. அதிவேகம் மகிழ்ச்சி தராது அது உயிரை பறிக்கும். இளைஞர்கள் தங்கள் உயிரையும் தங்கள் குடும்பத்தின் கனவுகளையும் பாதுகாக்கும் விதத்தில் சாலையில் பயணிக்க வேண்டும்.



நா.உசாந்தினி,
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

# திட்டமிடலின்றிய கிரவல் அகழ்வால் நாசமாகும் கிராமங்கள்!

இன்றைய உலகின் வளர்ச்சி மற்றும் நகரமயமாக்கல் மிகத் துரிதமாக இடம் பெறுகின்றது. இதனால் கட்டடத் துறையிலும் போக்குவரத்து துறையிலும் பெருமளவுக்கு கிரவல் மற்றும் கற்கள் தேவைப்படுகின்றன. இந்த தேவையை பூர்த்தி செய்யும் நோக்கில் பல கிராமப்புற பகுதிகளில் இயற்கை வளமான நிலப்பகுதிகளில் கிரவல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது. இது ஆரம்ப காலம் தொடக்கம் இன்று வரை பொருளாதார ஆதாயம் கொண்ட தொழிலாக காணப்பட்டாலும் நீண்ட காலத்தின் பின் சுற்றுச்சூழல் மற்றும் சமூக வாழ்வில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

கிரவல் அகழ்வு என்பது கட்டுமான பணிகளுக்கு தேவையான கிரவல் மற்றும் மணலை நிலத்திலிருந்து தோண்டி எடுக்கும் ஒரு செயல்முறையாகும். இது சட்டபூர்வமாகவும் சட்டவிரோதமாகவும் இடம்பெறுகின்றது. சூழலின் முக்கியத்துவம் உணராமல் ஒவ்வொரும் தம் சுயநலத்துக்காக நாட்டிலுள்ள வளங்களை கேள்விக்குள்ளாக்குகின்றனர். ஒவ்வொரு வளமும் மனித வாழ்க்கைக்கு எந்த அளவுக்கு முக்கியமானவை என்பதை நாம் அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

பௌதிக சூழல் மற்றும் பண்பாட்டுச் சூழல் என இரண்டு வகையாக சூழலை நோக்க முடியும். இதில் பண்பாட்டுச் சூழல் மனிதனால் உருவாக்கப்படுவதாகும்.

பௌதிக சூழல் என்பது இயற்கை சூழலில் மனிதனுக்குக் கிடைக்கத்தக்கது அல்லது கிடைத்த இயற்கை சூழலை மனித வாழ்வில் பயன்படுத்துகின்ற போது சிறந்த திட்டமிடல்களை மேற்கொண்டு பயன்படுத்த வேண்டும் என்பதே சூழலியல் அறிஞர்களின் கருத்தாகும்.

சூழலில் இருந்து வளங்களைப் பெறுகின்ற போது அது புதுப்பிக்கக் கூடிய வளம் மற்றும் புதுப்பிக்க முடியாத வளங்கள் என இரு வகையாக காணப்படுகின்றது. உதாரணமாக கடலில் இருந்து மீன் வளத்தைப் பெறுகின்ற போது அந்த மீன் வளம் குறுகிய காலத்தில் மீளவும் உருவாகும் வளமாக காணப்படுகிறது. ஆனால் காடுகளில் இருந்து மரங்களையும், கிரவல் போன்ற கனிய வளங்களையும் பெறுகின்ற போது அவை மிக நீண்ட காலத்தின் பின்பே மீள உருவாகும் வளங்களாக காணப்படுகின்றன. எனவே இவ்வாறான நிலையில் உள்ள வளங்களை திட்டமிட்டு பயன்படுத்துவதன் மூலம் வளங்களை அழிவடையாது பாதுகாக்க முடியும். இல்லையெனில் அதன் பாதிபானது மனிதகுலத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

இற்றைக்கு 20 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வன்னிப் பகுதியில் நிலவுகின்ற கால நிலைக்கும் தற்காலத்தில் காணப்படுகின்ற காலநிலைக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. இதனால் பயிற்செய்கையில் போதுமான விளைச்சல் இல்லை, சூழலில் காணப்பட்ட பல்லின உயிரினங்கள் அழிவடைகின்றன, தொற்றுநோய் தாக்கம் என்பன இடம்பெறுகின்றன. மனிதனால் இயற்கையின் சமநிலையில் ஏற்பட்ட பாரிய குழப்பமே இந்த நிலைமைக்கு முக்கிய காரணமாகும். மேலும் யுத்தத்தில் பாதிப்புகளுக்கு அதிகம் உள்ளாக்கிய கிளிநொச்சி, முல்லைதீவு, வவுனியா வடக்கு போன்ற பிரதேசங்களில் அதிக அளவு உட்கட்டுமான பணிகளை மேற்கொள்ள வேண்டிய தேவை காணப்படுகின்றது. இந்தத் தேவையை பூர்த்தி செய்வதற்காக அதிகளவான கிரவல் அகழ்வு செயல் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இது இன்று பாரிய ஒரு சூழலியல் பிரச்சினையாகக் காணப்படுகின்றது.

வவுனியா வடக்கில் கனகராயன்குளத்தில் பாரியளவு கிரவல் அகழப்பட்டு வருகின்றது. இதற்கான அனுமதியைக் கனிய வளத் திணைக்களமே

தொடர்ச்சி▼



# திட்டமிடலின்றிய கிரவல் அகழ்வால் நாசமாகும் கிராமங்கள்!

தொடர்ச்சி▲

வழங்குகின்றது. கனியவளத் திணைக்களம் என்பது இலங்கையில் கனிய வளங்களைச் சீர்மையான முறையில் நிர்வகிக்கும் பொறுப்பை வகிக்கும் முக்கிய அரச திணைக்களமாகும்.

கிரவல் அகழ்வு தொடர்பாக இத்திணைக்களம் பல முக்கியமான பொறுப்புகள் மற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. குறிப்பாக இதன் முக்கியமான செயற்பாடுகளில் ஒன்று, கிரவல் அகழ்வுக்கு சட்டபூர்வமான அனுமதிகளை வழங்குவது ஆகும். எந்த ஒரு நபர் அல்லது நிறுவனம் கிரவல் அகழ்வை மேற்கொள்ள விரும்பினாலும், முன்பாக GSMB-இல் இருந்து "Mining License" பெற வேண்டியது கட்டாயமாகும். இந்த அனுமதி வழங்கும் போது, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு (EIA) அல்லது சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் (EMP) கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது.

சுற்றுச்சூழலுக்குத் தீங்கு விளைவிக்கும் விதமான அகழ்வுகள் கண்டறியப்பட்டால், அனுமதி இரத்து செய்யப்படும் அல்லது பொறுப்புக் கூறல் நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக குறிப்பிட்ட தொகை பணம் அறவிடப்படுகின்றது. முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட பின்ரே அப் பணம் ஒப்பந்தகாரருக்கு மீளக் கொடுக்க முடியும். மேலும் அகழ்வின்போதுமண்ணின்தரத்தைஆராய்ந்துஉறுதிப்படுத்திய பின்னரே அதற்கான அனுமதி வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் கிரவல் அகழ்வைச் சட்டபூர்வமாகவும், நிலைத்தன்மையுடனும், சுற்றுச்சூழல் பாதிப்புகளை குறைக்கும் வகையிலும் கட்டுப்படுத்தல் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. ஆனாலும் ஏன் நாட்டின் இயற்கை வளங்கள் அழிவடைகின்றன?.

இதனால் ஏற்படும் தாக்கம் பற்றி நோக்குகின்ற போது ஆரம்பத்தில் வேளாண்மை மற்றும் பிற பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்தப்பட்ட நிலங்கள் கிரவல் அகழ்வின் பின் தரிசு நிலங்களாக காணப்படுகின்றன. உதாரணமாக கனகராயன் குளத்தில் சென்ற வருடம் ஒரு ஏக்கர் காணியில் 400 கிலோ உளுந்து அறுவடை செய்யப்பட்டது. ஆனால் இன்று இந்த நிலம் கிரவல் அகழ்வுக்காகப் பயன்படுத்தப்பட்டு குன்றும் குழியுமான தரிசு நிலமாக காணப்படுகிறது. மேலும் காட்டை அண்மித்து கிரவல் அகழ்வை மேற்கொள்ளுகின்ற போது இயற்கை வளமான காடுகள் அழிக்கப்படுகின்றன. இதனால் காலநிலை மாற்றம் ஏற்படுகின்றது. மேலும் ஒரு காணியில் கிரவல் அகழ்வை மேற்கொண்டு மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வரும்போது செலவு அதிகமாக காணப்படுகிறது. அதனாலேயே அக்காணிகளைக் குன்றும் குழியுமாக கைவிடுகின்ற நிலைமை உள்ளது.

கிரவல் அகழ்வு மேற்கொள்ளப்படுகின்ற காணிக்கு அருகாமையில் உள்ள விவசாய நிலங்களின் விளைச்சலும் பாதிக்கப்படும் தன்மை காணப்படுகின்றது. உதாரணமாக விவசாய நிலங்களுக்கு அருகில் குன்றும் குழியுமாக காணப்படுகின்ற போது மழை காலத்தில் விவசாய நிலங்களில் காணப்படுகின்ற நீர் முழுமையாக வழிந்து ஓடுகின்ற போது வறட்சியால் விவசாயங்கள் அழிவடைகின்றன. தண்ணீர் தேங்கி நிற்கும் போது பயிர்கள் அழுகி அழிவடைகின்ற நிலைமையும் காணப்படுகிறது. இதனால் கிராமத்தின் பயிர்ச்செய்கை விளைச்சல் என்பது கேள்விக்குறியாகின்றது. இதனால் விவசாயிகள் பொருளாதார நெருக்கடிக்கு ஆளாகின்றனர் பலர் தங்கள் நிலத்தை விற்று தொழிலாளி பணிக்கு மாறுகின்றன. இதனால் கிராமப்புறங்களில் விவசாய கலாசாரம்

தொடர்ச்சி▼

# திட்டமிடலின்றிய கிரவல் அகழ்வால் நாசமாகும் கிராமங்கள்!

தொடர்ச்சி▲

குறையும் அபாயம் ஏற்படுகின்றது.

கிரவல் அகழ்வால் கால்நடை வளர்ப்பு பாதிப் படைகின்றது. குறிப்பாக கிரவல் அகழ்வுக்காக பெரும்பாலான நிலங்கள் தோண்டப்பட்டு வெறிச் சோடி கிடக்கின்றன. இதனால் கால்நடை மேய்ச்ச லுக்காக பயன்படுத்திய நிலங்கள் குறைந்து செல்கின்றன. மேய்ச்சல் இல்லாததால் ஆடுகள், மாடுகளுக்கு போதுமான உணவைப் பெற முடியா மல் பால், இறைச்சி போன்ற உற்பத்திகள் வீழ்ச்சிய டைகின்றன.

மேலும் இயற்கை தாவரங்கள் மற்றும் புல் வகைகள் அழிவடைவதால் கால்நடைகளுக்கான இயற்கை உணவு வளங்கல் குறைவடைகின்றன. இது செயற்கை உணவுகள் சார்ந்த வாய்ப்பை அதிகரிக்கச் செய்கிறது. இதனால் செலவுகள் உயர்ந்துள்ளன. மேய்ச்சல் நிலம், நீர், உணவு பற்றாக்குறை காரணமாக வளர்ப்பு எண்ணிக்கை குறைவடைகிறது. இதனால் கிராமப்புற மக்களின் முதன்மை வருமானம் குறைவடைந்து வறுமை அதிகரித்துச் செல்கின்றது. கிரவலை அள்ளிய பின்னர் அதனை மூடாது அவ்வாறு விட்டு செல்லு கின்ற போது மழைக்காலத்தில் மழை நீர் தேங்கி நின்று நுளம்பு பெருக்கி நோய்த் தொற்று ஏற்படுகி றது. கிடங்குகள் ஆழமாக வெட்டப்படுகின்ற போது அது வெறும் சேறும் சகதியுமாக காணப்படுவ தால் அதற்குள் கால்நடைகள் விழுந்து இறந்து போகும் தன்மையும் காணப்படுகிறது. இதனால் சூழலில் துர்நாற்றம் ஏற்பட்டு சுற்றுச்சூழல் பாதிப் படைகின்றது.

காற்று மற்றும் ஒலி மாசுபாடு காணப்படுகின்றது. அதாவது அகழ்வுப் பணிகள் மற்றும் கிரவலை ஏற்றிச் செல்லும் கனரக வாகனங்களின் போக்கு வரத்தின் போது அதிகப்படியான தூசி காற்றில் கலக்கிறது. இது அந்தப் பகுதி மக்களின் ஆரோக் கியத்தை குறிப்பாக சுவாசக் கோளாறுகளை ஏற்படுத்துகின்றது. மேலும் வெடிமருந்துகளைப் பயன்படுத்துதல் அல்லது கனரக இயந்திரங்களை இயக்குதல் போன்றவற்றால் அதிக சத்தம் மற்றும் அதிர்வுகள் ஏற்படுகின்றன. இதனால் அருகிலுள்ள குடியிருப்புகளில் வாழும் கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியோர்கள் பாதிப்படை கின்றனர். கிரவல் அகழ்வால் நிலம் ஆழமா கத் தோண்டப்படுவதால் அதன் இயற்கை மண் அடுக்குகள் சேதம் அடைகின்றன. மேல்மண் அகற்றப்படுவதால் உரம் மிக்க தன்மை குறை வடைகிறது. இதனால் பயிர்கள் குறித்த விளைச் சல் குறைவடைகின்றது.

கிரவல் நிலத்திலிருந்து மூன்று அடி வரைக்குமே தோண்ட முடியும். ஆனால் கனகராயன் குளம் வடக்கு பெரியகுள ஆயுள்வேத மருத்துவமனைக்கு பின்னால் உள்ள கிரவல் குவாரிகள் கிட்டத்தட்ட 12 அடிவரை தோண்டப்பட்டுக் காணப்படுகிறன. இதனால் இக்காணிகள் குன்றும் குழியுமாகக் கைவி டப்பட்ட நிலையில் உள்ளன. மேலும் கிரவல் அகழ்வுக்கு நிலம் கொடுப்பவர்களில் அதிகமானோர் இவ்விடத்தை விட்டு நீண்ட காலம் வேறு தேவையின் பொருட்டு இடம்பெயர்ந்து சென்றிருப்பவர்களாக காணப்படுகின்றனர். தாம் இங்கு இருக்கிறோம் என்பதை உறுதிப்படுத்தி அதற்கான அனுமதி பெறுகின்றனர். பணமிருந்தால் எதனையும் செய்ய முடியும் என்ற போக்கு சமூகத்தில் புரை யோடிக் கிடக்கின்றது. மேலும் கிராமப் புறங்களில் காணப்படுகின்ற வறுமை நிலையைக் காரணம் காட்டி நீங்கள் இங்கு இருக்கின்ற கிரவலைக் கொடுத்தால் இவ்வளவு தொகை பணம் கிடைக் கும் என பணத்தின் மோகத்தை காட்டி கிர வல் அள்ளுகின்ற போக்கும் காணப்படுகின் றது.

கிரவல் அகழ்வால் ஏற்படுகின்ற பாரிய சுற்றுச் சூழல் பாதிப்புகளைத் தடுப்பதற்கான நிரந்தர மற்றும் நடைமுறைச் சாத்தியமான தீர்வுகள் காணப்படுகின்றன. இத்தீர்வுகள் அகழ்வு முறைக ளைக் கட்டுப்படுத்துவது, மாற்றுப் பொருள்களைப் பயன்படுத்துவது மற்றும் மறுசீரமைப்பு ஆகிய வற்றை மையமாகக் கொண்டுள்ளன. அகழ்வு ஆழத்தைக் கட்டுப்படுத்துதல், குறிப்பாக நிலத்தடி நீர்மட்டத்துக்கு மேலே ஒரு பாதுகாப்பான இடை வெளியை விட்டுவிட்டு மட்டுமே கிரவல் அகழப்பட வேண்டும் எனச் சட்டங்கள் மூலம் நிர்ணயித்தல், மேலும் அது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத் தல், அகழ்வு தொடங்குவதற்கு முன், வளமான மேல் மண்ணை அகற்றி, தனியாகப் பாதுகாத்து வைத் தல், அகழ்வு முடிந்தபின், நிலத்தை மறுசீர மைக்க இந்த மண்ணைப் பயன்படுத்துதல், மேலும் அகழ்வு நடைபெறும் இடத்தைச் சுற்றி மழைநீர் மற்றும் ஓடைநீர் முறையாக வடிந்து செல்ல வடிகால் கால்வாய்களை அமைத்தல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

அகழ்வுப் பணிகள் நிறைவடைந்த பின்னர், நிலத்தை அதன் முந்தைய நிலைக்கு மீளக்கொண்டு வருதல், அகழ்வுப் பணியின்போதே ஒரு பகுதி கிரவல் அகழ்ந்தவுடன் அந்தப் பகுதியை உடனடி யாகச் சீரமைத்துத் தாவரங்களை நடுதல் போன்ற செயற்பாடுகள் பல்லுயிரினங்களின் வாழ்விடங் களை மீளுருவாக்கம் செய்யும். மண்ணின் கட்ட மைப்பையும் பலப்படுத்தும்.

சட்டவிரோத அகழ்வைத் தடுக்க கடுமையான அபராதங்கள் மற்றும் சிறைத் தண்டனைகளைச் சட்டங்களில் சேர்ப்பதுடன், அவற்றைச் சக்தி வாய்ந்த முறையில் அமுல்படுத்துதல் வேண்டும். குறிப்பாகச் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு எல்லா கிரவல் அகழ்வுத் திட்டங்களுக்கும், அதன் சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறித்து விரிவான ஈ.ஐ.ஏ. ஆய்வறிக்கை கட்டாயம் என நிர்ணயித்தல்,கிர வல் அகழ்வால் ஏற்படும் பாதிப்புகள் குறித்துப் பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி, உள்ளூர் சமூகங்களை கண்காணிப்பில் ஈடுபடுத் துதல் போன்றவற்றால் கிரவல் அகழ்வால் ஏற்படும் சூழலியல் சார் பிரச்சினைகளைக் குறைத்துக் கொள்ள முடியும்.

அபிவிருத்திக்காக கிரவல் அகழப்படுவதைத் தவிர்க்க முடியாது. ஆனால் அந்தக் கிரவலைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தியால் கிடைக்கும் நன்மையை விட கிரவல் அகழ்வால் கிடைக்கும் பாதிப்பு அதிகமாகும். ஒவ்வொரு மனி தனும் இயற்கையை நேசிக்கும் மனிதனாக மாற வேண்டும். சூழல் பற்றிய கல்வியும் விழிப்புணர் வும் ஏற்படுத்த வேண்டும். இது காலத் தின் கட்டாய மாகும்.



மாகாண சபைகளுக்கு மத்திய அமைச்சுகளின் நிதிகளை நேரடியாக வழங்க அறிவுறுத்து

# வடக்கு 2026 இல் அபிவிருத்திக்கு மிகப்பெரிய பாய்ச்சல்மிக்க ஆண்டாகவே அமையப்போகிறது!

## வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவிப்பு

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும், நிதி ஆணைக்குழுவினரும் அடுத்த ஆண்டு மாகாண சபைகளுக்கு மத்திய அமைச்சுகளின் நிதிகளை நேரடியாக வழங்குவது தொடர்பிலும் அறிவுறுத்தல்கள் வழங்கியுள்ளனர். அடுத்த ஆண்டுவடக்கு மாகாணத்தைப்பொறுத்தவரையில் அபிவிருத்திக்கு மிகப்பெரிய பாய்ச்சல்மிக்க ஆண்டாகவே அமையப் போகின்றது என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

இலங்கை பொறியியல்சேவை மற்றும் இணைந்த சேவையின் தொழில்நுட்பவியல் சேவை பதவிக்கான நியமனம் வழங்கல் நிகழ்வு கைதடியிலுள்ள பிரதம செயலாளர் அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஆளுநர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது,

இன்று நாம் வடக்கு மாகாணத்தின் வரலாற்றில் ஒரு முக்கியமான தருணத்தில் ஒன்றுகூடியுள்ளோம். நீண்ட இடைவெளிக்குப் பிறகு 4 பொறியியலாளர்களையும், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் 39 பேரையும் எங்கள் மாகாண சேவைக்கு வரவேற்கின்றோம். இந்த நியமனம், வெறும் ஒரு பணியிடப் பதவி அல்ல. இது எங்கள் மாகாணத்தின் எதிர்கால வளர்ச்சிக்கான புதிய நம்பிக்கையின் தொடக்கம்.

பிரதமர் ஹரிணி அமரசூரிய தலைமையிலான குழு பல்வேறு பரிசீலனைக்குப் பின்னர் ஒவ்வொரு மாகாணத்துக்கும் நியமனங்களுக்கான அனுமதியை வழங்கியிருக்கின்றது. முதலில் அதற்கு அவர்களுக்கு நன்றிகளைக் கூறுகின்றேன். வடக்கு மாகாணத்துக்கு பல்வேறு துறைகளிலும் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக 551 பேரை உள்வாங்க அனுமதிக்கப்பட்டிருக்கின்றோம்.

தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் 75 பேரை சேவையில் உள்வாங்க அனுமதி கிடைக்கப்பெற்றிருந்த நிலையில் நாங்கள் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு ஊடாக விண்ணப்பங்களைக் கோரினோம். எங்களுக்கு நூற்றுக்கணக்கான விண்ணப்பங்கள் கிடைத்திருந்தன. அதன் பின்னர் தகுதியான விண்ணப்பதாரிகளை பரீட்சைக்கு அழைத்திருந்தோம். பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் நேர்முகத் தேர்வை எதிர்கொண்டனர். அவர்களிலிருந்து வடிகட்டப்பட்டே 39 பேர் இன்று நியமனம் பெற்றுள்ளனர். இது உங்கள் திறமையையும் உழைப்பையும் பிரதிபலிக்கும் பெருமைக்குரிய தருணம்.

இங்கு இன்னொரு விடயத்தையும் குறிப்பிடுகின்றேன். மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் கோரப்பட்ட பல்வேறு துறைகளுக்கும் அதிகளவான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றிருக்கின்றன. வேலை வாய்ப்புக்காக இன்னும் பலர் காத்திருக்கின்றனர். அவர்களின் வாய்ப்புக்களைத் தட்டியே நீங்கள் இந்த நியமனத்தைப் பெற்றுள்ளீர்கள். உங்கள் ஓய்வுகாலம் வரையில் நீங்கள் பணியாற்றவேண்டும். இன்று நியமனத்தைப் பெற்றுவிட்டு இடையில் பணியை விட்டு விலகிச் செல்வது, உங்களுடன் போட்டியிட்டும் வாய்ப்பு

தொடர்ச்சி▼







மாகாண சபைகளுக்கு மத்திய அமைச்சுகளின் நிதிகளை நேரடியாக வழங்க அறிவுறுத்து

# வடக்கு 2026 இல் அபிவிருத்திக்கு மிகப்பெரிய பாய்ச்சல்மிக்க ஆண்டாகவே அமையப்போகிறது!

## வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவிப்பு

தொடர்ச்சி▲

பெறாத பலருக்கு நீங்கள் செய்யும் அநீதி யாகும். இதை நினைவில் கொள்ளுங்கள்.

எமது மாகாணத்தின் பல திணைக்களங்கள் இன்று உங்களின் சேவையை எதிர்நோக்கியுள்ளன. அது உங்கள் பணியின் பெறுமதியை வெளிப்படுத்துகிறது. அபிவிருத்தி நோக்கில் பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் பங்களிப்பு மிகப் பெரியது.

அதுவும் வடக்கு மாகாணத்துக்கு தேசிய மக்கள் சக்தி அரசால் கடந்த ஆண்டு அதிகளவான நிதி ஒதுக்கப்பட்டது. அடுத்த ஆண்டும் அதைவிட அதிகமான நிதி ஒதுக்கப்படவுள்ளது. இதற்கு மேலதிகமாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவும், நிதி ஆணைக் குழுவினரும் அடுத்த ஆண்டு மாகாண சபைகளுக்கு மத்திய அமைச்சுக்களின் நிதிகளை நேரடியாக வழங்குவது தொடர்பிலும் அறிவுறுத்தல்கள் வழங்கியுள்ளனர். எனவே அடுத்த ஆண்டு வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் அபிவிருத்திக்கு மிகப்பெரிய பாய்ச்சல் மிக்க ஆண்டாகவே அமையப்போகின்றது.

கடந்த காலங்களில் வடக்கு மாகாணத்துக்கு அதிகளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கவில்லை அல்லது ஒதுக்கப்பட்ட நிதிகளும் அரசியல்வாதிகளுடைய தலையீடுகளுடனே திட்டங்களை நடைமுறைப்படுத்த விடுவிக்கப்பட்டிருந்தன. ஆனால் இப்போது அவ்வாறான நிலைமையில்லை. பல மடங்கு நிதி ஒதுக்கப்படுவதுடன் எந்தவொரு தலையீடும் இல்லாமல் திட்டங்களை அதுவும் மக்களுக்குத் தேவையான திட்டங்களை அடையாளப்படுத்தி முன்னெடுக்கக் கூடிய வாய்ப்புள்ளது. வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய 4 மாவட்டங்களுக்குமே அபிவிருத்தியில் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டியிருக்கின்றது. அதைக் கருதிலெடுத்தே நீங்களும் பணியாற்றவேண்டும்.

மக்களின் வீடுகள், மதில்கள், கட்டடங்கள் கட்டுவதற்கான அனுமதி விண்ணப்பங்களைப் பரிசீலிப்பதிலும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் பங்கு அளப்பெரியது. மக்களுடன் நேரடியாகத் தொடர்புபடும் இத்தகைய வேலைகள் கடந்த காலங்களில் இழுத்தடிக்கப்பட்டிருந்தன. தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை என்பது ஒருபுறமிருந்தாலும் மறுபுறம் வேறு எதையோ எதிர்பார்த்தும் அவை நடைபெற்றிருந்தன.

உறவினர் அல்லது பினாமி பெயர்களின் மூலம் ஒப்பந்தங்களைப் பெறுதல், வேலைத்தளங்களைநேரடியாகப்பார்வையிடாமல் கையொப்பமிடுதல் போன்ற குற்றச்சாட்டுகள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் தொடர்பாக மக்களிடமிருந்து முன்வைக்கப்படுகின்றன. மனச்சாட்சியுடன் நேர்மையாகச் செயற்படும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும் இவ்வாறான ஒரு சிலரின் தவறால் மன உளைச்சலைச் சந்திக்க நேரிடுகின்றது.

நீங்கள் கடுமையான போட்டிக்குள் வென்று, பல கனவுகளுடன் இந்தச் சேவைக்கு வந்துள்ளீர்கள். மக்களுக்கு நல்லது செய்யவேண்டும் என்ற இலக்கு உங்களிடம் உறுதியுடன் இருக்கும். திணைக்களங்களில் இணைந்த பின், சிலரால் உங்கள் கனவுகள் அல்லது இலக்குகள் திசைதிருப்பப்படாதபடி உங்களையே நீங்கள் காக்க வேண்டும். தவறு செய்பவர்கள், மற்றவர்களையும் தவறு செய்யத் தூண்டுவார்கள். அதில் ஈடுபட்டால், உங்கள் கனவையும் இலக்கையும் நீங்களே புதைத்து விடுவீர்கள்.

எங்கள் அரச பொறிமுறை 77 ஆண்டுகளாக இயங்கி வருகிறது. அதில் சில பழமையான குறைகள் இன்னும் நிலவுகின்றன. அவற்றை மாற்றுவது எளிதல்ல. ஆனால், அந்தச் சங்கிலியை உடைக்க முன்வரும் தலைமுறையாக நீங்கள் இருக்க வேண்டும். அந்த தொடர் ஊழல், அலட்சியம், இலஞ்சம் என தொடராமல், அதனை முறியடிக்கும் தலைமுறையாக நீங்கள் மாறுங்கள்.

உங்கள் கடமையைப் பெருமையுடனும் பொறுப்புடனும் ஏற்று, மக்களுக்காக அக்கறையுடனும் திறமையுடனும் சேவை செய்யுங்கள். உங்கள் உழைப்பும் நேர்மையும் வடக்கு மாகாண மக்களுக்காக ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கட்டும்.

நாளைய தினம், உங்கள் செயல்பாடுகள் வழியாக மாற்றம் உருவாகும் என நான் நம்புகிறேன். உங்கள் புதிய பயணம் அர்த்தமுள்ளதாய், மக்களுக்கு நம்பிக்கையூட்டுவதாக அமையட்டும்.- என்றார்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் அமைச்சருமான இ.சந்திரசேகர் சார்பில் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் இணைப்பாளர் சு.கபிலன், வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் – நிர்வாகம், பொறியியல், ஆளணியும் பயிற்சியும், ஆளுநரின் செயலாளர், பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.






# மலையகத்தில் புதிதாக உருவாக்கப்படவுள்ள அரசியல் அமைப்பினர் கலந்துரையாடல்

(மஸ்கெலியா நிருபர்)

மலையகத்தில் புதிதாக உருவாக்கப் படவுள்ள புதிய அரசியல் தொழிற்சங்க அமைப்பின் கலந்துரையாடல் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை ஹட்டன் லா எடம்ஸ் விருந்தகத்தில் இடம்பெற்றது.

"உரிமை மீட்போம் மலையகம் காப் போம்" என்னும் தொனிப்பொருளில் இடம் பெற்ற இந்தக் கலந்துரையாடலில் தொழி லாளர்தேசியசங்கத்தின்முன்னாள்உறுப் பினர்களான பா. சிவனேசன், எம். ராம், வைத்தியர் அழகுமுத்து நந்தகுமார் உட் பட பலர் கலந்து கொண்டனர். தங்கள் கருத்துகளை முன் வைத்தனர்.

எதிர்வரும் ஜனவரி மாதமளவில் புதிய அமைப்பின் பெயர் அங்குரார்ப் பணம் செய்யப்படவுள்ளது என்று தெரி விக்கப்பட்டுள்ளது.




# பதிதாகக் கட்டப்படும் வீட்டை சேதப்படுத்திய காட்டு யானை!



(ஏ.எச்.ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட தம்ப லகாமம் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கல்மெடியாவ தெற்கு பகுதியில் ஊருக்குள் புகுந்த காட்டு யானை, புதி தாகக் கட்டப்பட்டுவரும் வீட்டைச் சேதப் படுத்தியுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று இரவு (15) இடம் பெற்றுள்ளது. இரவு நேரத்தில் ஊருக்குள் புகுந்த காட்டு யானை, வீட்டின் நிலை, ஜன்னல் பகுதியைத் தும்சம் செய்துள்ளது என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் பாதுகாப்பான யானை வேலியின்மை காரணமாக காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது.

குறித்த சேத விவரம் தொடர் பில் உரிய அதிகாரிகளுக்கு அறிவிக் கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப் படுகிறது.



# சாரணத் தலைவர்களுக்கு கிழக்கில் பயிற்சிப் பாசறை

(றிபாஸ்)

இலங்கை சாரணர் சங்கத்தின் பிரதம ஆணையாளரின் வழிகாட்டலின் கீழ் தேசிய பயிற்சிக் பிரிவின் ஏற்பாட்டில் சாரணத் தலைவர்களுக்கான பயிற்சி நெறி அண்மையில் மட்டக்களப்பு மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

"வினைத்திறன் மிக்க தலைமைத்துவத்துக்காக எம்மை நாம் மேம்படுத்திக் கொள்வோம் எனும் தொனிப்பொருளில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் கிழக்கு மாகாணம் திருக்கோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிருந்து தருச்சின்னம் பயிற்சியை நிறைவு செய்த மாவட்ட ஆணையாளர்கள், உதவி மாவட்ட ஆணையாளர்கள், சாரணத்தலைவர்கள் என நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இலங்கை சாரணர் சங்கத்தின் தலைமைப் பயிற்சி ஆணையாளர், முன்னாள் பயிற்சி ஆணையாளர், தலைமைகத்தின் பிரதி, உதவி ஆணையாளர்கள், வளவாளர்களாக கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கினர்.









# இருள் மூழ்கி காணப்படும் பரந்தன் பிரதான சந்தி!

## இரவு வேளைகளில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன

(கண்டாவளை நிருபர்)

கிளிநொச்சி மாவட்டத்தின் உப நகரங்களில் ஒன்றாக காணப்படும் பரந்தன் பிரதான சந்தி தொடர்ந்தும் இருள் மூழ்கி காணப்படுகிறது. இதனால் இரவு வேலைகளில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவதுடன் வழிப்பறிக் கொள்ளைகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதான உபநகரங்களில் ஒன்றாக காணப்படும் பரந்தன் பகுதியானது பூநகரி திருகோணமலை முல்லைத்தீவு ஆகிய வீதிகளை இணைக்கும் வடமாகாணத்தின் போக்குவரத்து குவிவு மையங்களில் ஒன்றாக காணப்படும் பரந்தன் சந்திக்கான வீதிமின்விளக்குகள்எதுவும்பொருத்தப்பாத நிலையில் நீண்டகாலமாக இரவு வேளைகளில் இருள் மூழ்கிக் காணப்படுகின்றது.

இவ்வாறு இருளில் மூழ்கிக் காணப்படுவதால் அடிக்கடி வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன.

ஏ-09 வீதியிலும், பரந்தன் - முல்லைத்தீவு வீதியிலும், பூநகரி வீதியிலும் காணப்படும் பாதசாரி கடவைகளிலும் மின்விளக்குகள் இல்லை.

நாளாந்தம் இரவழல் ஆயிரக்கணக்கான பாதசாரிகள், பயணிகள் நடமாட்டம் அதிகரித்த பகுதியாக உள்ள பரந்தன் பிரதான சந்தி பகுதியில் நாளாந்தம் விபத்துக்கள் அதிகரித்து காணப்படுகின்றன.

குறிப்பாக இரு அரச வங்கிகள், தபாலகம், பல நோக்குக் கூட்டுறவு சங்கம், எரிபொருள் நிரப்பு நிலையம் உள்ளிட்ட சேவை நிலையங்கள் பரந்தன் சாந்தியை மையப்படுத்திய அமைந்துள்ள நிலையிலும் இந்தப் பகுதி இரவில் இருளில் மூழ்கிக் காணப்படுகிறது.

எனவே இது தொடர்பில் உரிய தரப்புகள் நடவடிக்கை எடுத்து வீதி மின் விளக்குகளைப் பொருத்துவதற்கும் சரியான போக்குவரத்து விதிகளை பின்பற்றுவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று பல்வேறு தரப்பிலும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# அம்பாறையில் தாழ்நிலப் பகுதிகளில் வெள்ள அனர்த்தம் ஏற்படும் அபாயம்!



(வி.ரி. சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் பெய்துவரும் கடும் மழை காரணமாக தாழ்நிலப்பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (14) தொடக்கம் தொடர்ந்து கடுமையான மழை பெய்து வருகின்றது.

இதன் காரணமாக மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் வெள்ளம் ஏற்படுவதற்கான நிலை காணப்படுகிறது.

பெய்துவரும் கடும் மழை காரணமாக நகரங்களின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள தாழ் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

தொடர்ச்சியாக மழைபெய்யுமானால் சில பகுதிகளுக்கான குறிப்பாக கிட்டங்கி காரைதீவு போக்குவரத்துகளும் பாதிக்கப்படும் நிலைமைகள் காணப்படுகிறது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேநேரம், கடந்த 11 ஆம் திகதி உருவான காற்றுச் சுழற்சி நகர்வதன் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கன மழைக்கான வாய்ப்புகள் உள்ளன என்று வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, இந்த மழை எதிர்வரும்20ஆம்திகதிவரைதொடரும்வாய்ப்புள்ளது. கனமழைக்கு வாய்ப்புள்ளதால் தாழ்நிலப் பகுதிகளில் உள்ள மக்கள் அவதானமாக இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

நேற்றைய தினம் வங்காள விரிகுடா கடல் பிராந்தியத்தில் காணப்பட்ட மேலடுக்கு காற்று சுழற்சியானது, காற்ற முத்த தாழ்வு பகுதியாக வலுவடைந்து, தற்போது இலங்கையின் கிழக்காக காணப்படுகின்றது.

இதன் காரணமாக வடக்கு, வடமத்தி, கிழக்கு மாகாணங்களில் அவ்வப்போதும் மழை அல்லது இடியுடன் கூடிய மழை காணப்படுகிறது.

எதிர்வரும் 20 ஆம் திகதியளவில் உருவாகவுள்ள இந்தக் காற்றழுத்தம் எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் பெரும்பாலும் ஒரு சூறாவளியாக உருமாறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை நேற்று (15) இலங்கையில் கிடைக்கப்பெற்ற மழை வீழ்ச்சிகளில் அதிகூடிய மழைவீழ்ச்சியாக யாழ்ப்பாணத்தில் அச்சுவேலி பிரதேசத்தில் 61.4 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், அதுகூடிய வெப்பநிலையாக அம்பாந்தோட்டை பிரதேசத்திலும் 32.1 செல்சியஸ் வெப்ப நிலையும், அதை குறைந்த வெப்ப நிலையாக நுவரெலியா பிரதேசத்திலும் 12.0 செல்சியஸ் வெப்ப நிலையும் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# வெள்ளத்தில் மிதக்கும் பளை பொதுச்சந்தை!

(பூ.லின்ரன்)

பச்சிளைப்பள்ளி பளை பொதுச் சந்தையானது தற்போது பெய்து வரும் கனமழை காரணமாக அதிக வெள்ளம் தேங்கி சந்தை நிலப்பரப்பு முழுவதும் வெள்ளத்தில் காணப்படுகின்றது.

இதனால் பச்சிலைப்பள்ளி மக்கள் தமது அன்றாட தேவைகளை பூர்த்தி செய்வதற்காக தினமும் பொதுச் சந்தையைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இன்றைய தினம் மக்கள் தமது அன்றாட தேவைகளை பூர்த்தி செய்வதற்கு மிகவும் நெருக்கடியை எதிர்நோக்கி வருகின்றனர். பொதுச் சந்தை சுற்றுச்சூழல் முழுவதும் வெள்ளம் வியாபித்து காணப்படுவதால் தமது பயண ஒழுங்குகளையும் தமது வர்த்தக செயற்பாடுகளையும் மேற்கொள்வதற்கு வெள்ளம் இடையூறாக உள்ளது என்று இருப்பதாகவும் பல தொற்று நோய் ஏற்படும் வாய்ப்புகள் உள்ளதாகவும் பச்சிளைப்பள்ளி மக்கள் தமது விசனத்தைத் தெரிவித்துள்ளனர்.

பச்சிளப்பள்ளி பொதுச்சந்தையானது தற்போது புனரமைப்பு வேலைகள் நடைபெறுவதோடு ஆங்காங்கு கட்டட பொருள்கள் குவித்த வண்ணமும் இருப்பதாகவும் இவ்வேலைத் திட்டங்களை மிக விரைவில் நிவர்த்தி செய்து தருமாறும் மக்கள் வேண்டி நிற்கின்றனர்.



# கிண்ணியாவில் ஆணின் சடலம் மீட்பு!

(முஹம்மட் றிஸ்னாத்)

கிண்ணியா தோனா கடலூர் முருகன் கோயிலுக்கு அருகாமையில் உள்ள கடை ஒன்றின் முன்பாக ஆண் ஒருவரின் சடலம் ஒன்று இன்று (16) காலை கிண்ணியா பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் சடலமாக மீட்கப்பட்டவர் ஏறாவூரை சேர்ந்த 55 மதிக்கத்தக்கவருத என்று கிண்ணியா பொலிஸார் ஆரம்ப விசாரணையின் போது தெரிவித்தனர்.

அவரது செயற்கை கால் ஒன்று அருகில் கழட்டி வைக்கப்பட்டுள்ளது. அவர் ஊன்றிச் செல்லும் கை தாவல் ஒன்றும் சடலம் காணப்படும் இடத்திலிருந்து சுமார் 20 மீற்றர் தூரத்தில் காணப்பட்டது என்றும் இரவு இவர் இறந்திருக்கலாம் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இன்று காலையில் சடலத்தைக் கண்ட கிண்ணியா பொது மக்கள் சிலர் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளனர். இதனை அடுத்து பொலிஸார் அங்கு சென்று சடலத்தை மீட்டுள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சாதி அரசியலை பிஹார் நிராகரித்தது: பிரதமர் நரேந்திர மோடி கூறுகின்றார்

பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலில் சாதி அரசியலை மக்கள் நிராகரித்து உள்ளனர். இந்த தேர்தலில் தோல் வியை தழுவியவர்கள் பேரதிர்ச்சியில் மூழ்கி உள்ளனர் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பிர்சா முண்டாவின் 150 ஆவது பிறந்த தினம் மற்றும் பழங்குடியினர் கவுரவ தினம் நேற்று கொண்டாடப் பட்டது. இதையொட்டி குஜராத்தின் நர் மதா மாவட்டம், டெடியாபடா பகுதியில் உள்ள தேவமோக்ரா தேவி கோயிலில் பிரதமர் நரேந்திர மோடி நேற்று வழிபட் டார். இந்த கோயில் பழங்குடி மக்களின் கோயில் ஆகும்.

பின்னர் அங்கு நடந்த விழாவில் 9,700 கோடி இந்திய ரூபா மதிப்பிலான நலத்திட்டங்களை அவர் தொடங்கிவைத் தார். விழாவில் பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றுகையில்,



“சுதந்திர போராட்ட காலத்தில் பழங் குடியின மக்கள் வீரதீரமாக போரிட்டனர். ஆனால் சுமார் 60 ஆண்டு கால காங்கி ரஸ் ஆட்சிக் காலத்தில் அவர்களுக்கு உரிய மரியாதை வழங்கப்படவில்லை.

பழங்குடியின தலைவர் பிர்சா முண்டா முழுமையாக புறக்கணிக்கப்பட்டார். மத் தியில் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்த பிறகு முண்டாவின் பிறந்த தினம் பழங்குடி யினர் கௌரவ தினமாக அறிவிக்கப் பட்டது. பழங்குடியின மக்களின் நலன் களுக்கு மத்திய அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. முன்னாள் பிரத மர் வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில் பழங் குடியினர் நலனுக்காக தனித் துறை தொடங்கப்பட்டது.

குஜராத்தில் 2 பழங்குடி பல்கலைக் கழகங்கள் தொடங்கப்பட்டு உள்ளன. மேலும் குஜராத்தில் பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதிகளில் 10,000 பள்ளிகள் திறக்கப்பட்டு உள்ளன. பா.ஜ.க. சார்பில் பழங்குடியின மக்கள் மிக உயர்ந்த பதவி களில் நியமிக்கப்படுகின்றனர். பழங்கு- டியினத்தை சேர்ந்த மோகன் சரண் மாஜி ஒடிசா முதல்வராக பதவி வகிக்கிறார். இதேபோல பா.ஜ.க. ஆளும் பல்வேறு மாநிலங்களில் பழங்குடியின மக்கள் மிக முக்கிய பதவிகளை வகிக்கின்றனர்.” என்று தெரிவித்தார்.

# பிஹாரில் புதிய அரசு பதவியேற்பு; காந்தி மைதானத்தில் ஏற்பாடுகள்

பிஹார் சட்டப்பேரவை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி அபார வெற்றி பெற்ற நிலையில், புதிய அரசு அமைக்கும் பணிகள் வேகமெடுத்துள்ளன.

பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்கும் வகையில் நவம்பர் 19 அல்லது 20 ஆம் திகதி பதவியேற்பு விழா நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2025 பிஹார் சட்டப்பேரவை தேர்தலில் பா.ஜ.க. 89 இடங்களில் வென்று தனிப் பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது, அதைத் தொடர்ந்து நிதிஷ் குமாரின் ஐக்கிய ஜனதா தளம் 85 இடங்களை வென்றது. லோக் ஜனசக்தி (ராம்வி லாஸ்) 19 இடங்களையும், எச்.ஏ.எம். 5 இடங்களையும், ராஷ்ட்ரிய லோக் மோர்ச்சா 4 இடங்களையும் வென்றன.

எதிக்கட்சிகளின் மகா கூட்டணி 35 இடங்களை மட்டுமே வென்றது. ஓவைசி கட்சி 5 இடங்களிலும், பிஎஸ்பி ஒரு இடத்தி லும் வெற்றி பெற்றது.

இந்த நிலையில், பிஹாரில் புதிய அரசு அமைக்கும் பணிகள் விறுவிறுப் பாக நடந்து வருகின்றன. பதவியேற்பு விழாவுக்காக பாட்னாவின் காந்தி மைதா னத்தில் ஏற்பாடுகள் முழு வீச்சில் உள் ளன, இந்த நிகழ்வில் பிரதமர் மோடி மற்றும் பா.ஜ.க. ஆளும் மாநிலங்களின் முதலமைச்சர்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தைத் தொடங்கினார் முதல்வர் ஸ்டாலின்

தூய்மைப் பணியாளர்களுக்கான முதல்வரின் உணவுத் திட்டத்தை முதல்வர் ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார்.

முதல்கட்டமாக சென்னையில் 31,373 பேர் பயன்பெறும் வகையிலான இந்த திட்டம் டிசம்பர் 6 ஆம் திகதி முதல் தமி ழகத்தின் அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்படும் என்று அவர் அறிவித்துள்ளார்.



சென்னை மாநகராட்சியில் 3 ஷிப்ட் களில் பணியாற்றும் 31,373 தூய்மைப் பணியாளர்கள் பயன்பெறும் வகையில், முதல்வரின் உணவுத் திட்டத்தை முதல்வர் ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார்.

கலைவாணர் அரங்கில் நடைபெற்ற இந்த நிகழ்வில், தூய்மைப் பணியா ளர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவி களையும் வழங்கினார்.

இந்த விழாவில் அவர் உரையாற்று கையில்,

“சென்னை மாநகரத்தை தூய்மையா கப் பாதுகாக்கும் உங்களைப் பாதுகாக்க வேண்டியது எங்கள் கடமை. இந்த சமூகநீதிப் பயணத்தில் உங்கள் சுயமரி யாதையைக் காத்து, உங்கள் பசியைப் போக்கத்தான், முதல்வரின் உணவுத் திட்டத்தை தொடங்கியுள்ளோம்.

இதன்படி, தூய்மைப் பணியாளர்க ளுக்கு அவர்களது பணிக்கு இடையில் உணவு வேளையில் சுவை, ஆரோக்கி யம் நிறைந்த உணவு வழங்கப்படும். தூய்மையாக சமைத்து, டிபன்பாக்ஸில் வைத்து, வெப்பக் காப்பு பையில் எடுத்துச் சென்று, பணியாற்றும் இடத்தின் அருகில் உள்ளாட்சி அமைப்புக்குச் சொந்தமான கட்டடத்தில் அவர்களுக்கு உணவு பரி மாறப்படும். முதல்வரின் உணவுத் திட்டம் டிசம்பர் 6 ஆம் திகதி முதல் அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

தூய்மைப் பணியாளர்கள் நலனுக்காக தி.மு.க .ஆட்சியில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. 2006-11 இல் கருணாநிதி ஆட்சியில் தூய்மைப் பணி யாளர் நல வாரியம் அமைக்கப்பட்டது. தாட்கோ மூலம் தூய்மைப் பணியாளர் வாரிசுகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு தொழில் முனைவோராக மாற்ற வழி செய்யப்பட்டது. மூன்று சக்கர மிதிவண்டி வாகனங்கள், இலகு ரக வாகனங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. உங்களது மற்ற கோரிக்கைகளும் படிப் படியாக நிறைவேற்றப்படும்.” என்று தெரிவித்தார்.



# இஸ்ரேல் சர்வதேச சட்டத்தை மீறுவதாக ஐ.நா. குற்றச்சாட்டு

காஸாவுக்குள் நிவாரணப் பொருள்கள் செல்வதை இஸ்ரேல் தொடர்ந்து கட்டுப்படுத்துவதன் மூலம் சர்வதேச சட்டங்களை இஸ்ரேல் மீறுவதாக பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. பிரிவின் துணைப் பொதுச் செயலாளர் நடாலி பூக்ளி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, பிரஸ்ஸெல்ஸில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட அவர் அங்கு ஊடகங்களிடம் கருத்து தெரிவித்தார்.

காஸாவுக்குள் நிவாரணப் பொருள்கள் தடையின்றி செல்ல இஸ்ரேல் அனுமதிக்க வேண்டும் எனவும் அதற்காக ஐரோப்பிய யூனியன், அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகள் அனைத்தும் இஸ்ரேல் அரசின் மீதான அழுத்தத்தை அதிகரிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது தங்களிடம் உணவு, கூடாரங்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் 6,000 லொறிகளில் உள்ளன எனவும் குளிர்காலம் நெருங்கிவரும் நிலையில் பஞ்சம் மக்களைத் தொடர்ந்து வாட்டிவருவதாகவும் எனவே இந்தப் பொருட்கள் அனைத்தும் உடனடியாக காஸாவுக்குள் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தானில் பொலிஸுடன் பயங்கரவாதக் குழு மோதல்!



பாகிஸ்தானில் பயங்கரவாதக் குழுவுக்கும் போலிஸுக்கு இடையில் இடம்பெற்ற மோதலில் பயங்கரவாதக் குழுவைச் சேர்ந்த 5 பேர் பலியாகியுள்ளனர் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பாகிஸ்தானில் போராட்டக் குழுவினர் ஆதிக்கம் நிறைந்த கைபர் பக்துண்க்வா மாகாணத்தில் பொலிஸுக்கும் ஆயுதமேந்திய பயங்கரவாதக் குழுவினருக்கும் இடையே தீவிர துப்பாக்கிச் சூடு நீடித்துள்ளது.

அதில், 5 பயங்கரவாத குழுக்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாக கூறப்படுகிறது.

லக்கி மார்வாட் மாவட்டத்தில் இயங்கி வரும் ஒரு இறையியல் கல்வி நிறுவன வளாகத்தில் நுழைந்த சுமார் 30 பயங்கரவாதக் குழுவினரை, அங்கு பாதுகாப்புப் பணியில் இருந்த பொலிஸார் உள்ளூர் மக்கள் உதவியுடன் சுற்றி வளைத்துள்ளனர்

இதன்போது இருதரப்புக்குமிடையே சண்டை மூண்டதாகவும், இந்தச் சண்டையில் தோல்வியை ஏற்றுக்கொண்டு சரணடைந்துள்ள பயங்கரவாதக் குழுவினர் பேச்சுவார்த்தைக்கு ஒப்புக்கொண்டுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

இதையடுத்து, அவர்கள் அப்பகுதியிலிருந்து தப்பிச் செல்லாமல் இருக்க அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைபர் பக்துன்குவா மாகாணத்தின், பஜாவூர், கொஹாட், கராக் ஆகிய மாவட்டங்களில் பாதுகாப்புப் படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தத் தாக்குதல்களில் 22 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.




# ரஷ்ய எண்ணெய் மையம் மீது உக்ரைன் இராணுவம் தாக்குதல்

ரஷ்யாவின் இரண்டாவது மிகப் பெரிய மற்றும் முக்கிய எண்ணெய் மையத்தின் மீது உக்ரைன் இராணுவம் தாக்குதல் நடத்தியுள்ளது.

ரஷ்யாவின் நோவோரோசிஸ்க் மாகாணத்தில் அமைந்துள்ள முக்கிய எண்ணெய் மையத்தின் மீதே இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில், அங்குள்ள எண்ணெய் கிடங்குகள் மற்றும் எண்ணெய் விநியோகிக்கும் மிகப் பெரிய குழாய்கள் ஆகியவை சேதமாக்கப்பட்டு அந்த எண்ணெய் மையம் முழுவதும் தீப்பற்றி எரிந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்தோடு, ரஷ்யாவின் எஸ் – 400 வான் பாதுகாப்பு ஏவுதளத்தின் மீதும் உக்ரைன் தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி கருத்து வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட நெப்டியூன் மற்றும் ஃபிளாமிங்கோ ஏவுகணைகள் மூலம் ரஷியாவின் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும், இந்தத் தாக்குதல்கள் ரஷ்யாவின் எந்தப் பகுதியின் மீது நடத்தப்பட்டன எனும் தகவல்கள் வெளியாகவில்லை என தெரிவிக்கபடுகின்றது.

இந்தநிலையில், இந்தத் தாக்குதல்கள் அனைத்தும் ரஷ்யாவின் போருக்கு உதவும் முக்கிய கட்டமைப்புகளைக் குறிவைத்தே நடத்தப்பட்டதாக உக்ரைன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக, உக்ரைனின் கீவ் நகரத்தின் மீது அதிகாலை ரஷ்யா நூற்றுக்கணக்கான ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகள் மூலம் நடத்திய தாக்குதலில் 6 பேர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.






பக்கங்கள் - 03

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 16/11/2025

## தொலைதூரத்திலிருந்து ரோபோ மூலம் சிகிச்சை

கனடிய மருத்துவர்கள் சாதனை

C3




# குளிர் காலத்தில் அமெரிக்காவுக்கான கனேடியர்களின் பயணம் குறைந்தது

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகத்தின் கொள்கைகள் மற்றும் கனடாவுக்கு எதிராக விதிக்கப்பட்ட வரிகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக, கனேடியர்கள் அமெரிக்காவுக்குப் பயணிப்பதைத் தொடர்ந்து தவிர்த்து வருகின்றனர்.

இந்தக் குளிர் காலம் காரணமாக, அமெரிக்காவுக்கு கனேடியப் பயணிகள் வருகை குறைந்தது. தொடர்ந்து 10 ஆவது மாதமாக இந்த வருகை வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது.

கனடாவின் புள்ளிவிபர அலுவலகத்தின் தரவுகளின்படி, விமானப் பயணம் 24 வீதமாகவும், சிற்றூந்து பயணம் 30 வீதத்துக்கு அதிகமாகவும் குறைந்துள்ளது.

மேலும், ட்ரம்ப் நிர்வாகத்தின் வர்த்தகப் போர் மற்றும் கனடாவை 51 ஆவது மாநிலமாக மாற்றுவது பற்றிய கருத்துகள், இரு நாடுகளுக்குமிடையேயான உறவை மேலும் மோசமாக்கியுள்ளன.

C2

## அந்தரங்கப் பட வழக்கு:

# கனேடிய நீதிமன்றின் உத்தரவை சவால் செய்த எக்ஸ் நிறுவனம்

பிரிட்டிஷ் கொலம்பியாவின் சிவில் நீதிமன்றம் வழங்கிய உத்தரவின்படி, ஒப்புதல் இல்லாத அந்தரங்கப் படமொன்றை உலக அளவில் நீக்காமல், கனடாவில் மட்டும் முடக்கிய சமூக ஊடக நிறுவனமான எக்ஸ் அந்த உத்தரவுக்கு சட்டரீதியாக சவால் விடுத்துள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியாவில் வசிக்கும் மாற்றுப்பாலினத்தவர் ஒருவர், தனது அந்தரங்கப் படம் ஒப்புதல் இல்லாமல் சமூக ஊடகமான எஸ்ஸில் வெளியிடப்பட்டதாக முறைப்பாடு அளித்தார்.

இந்தச் சட்டவிரோதப் படத்தை எக்ஸ் தளத்திலிருந்து முற்றிலும் நீக்க வேண்டும் என்று பிரிட்டிஷ் கொலம்பியாவின் சிவில் நீதிமன்றம் உத்தரவிட்டது.



எனினும், எக்ஸ் நிறுவனம், அந்தப் படத்தை கனடாவில் மட்டும் பார்க்க முடியாதபடி தடுத்தது. ஆனால், உலகில் உள்ள மற்ற நாடுகளில் இருந்து அதைப் பார்க்க அனுமதித்தது.

இந்தநிலையில், நீதிமன்ற உத்தரவு உலகம் முழுவதும் அந்தப் படத்தை நீக்க வேண்டும் என்று கூறியது. கனடாவில் மட்டும் தடுப்பது என்பது

C2



# வத்திக்கானால் திருப்பி வழங்கப்பட்டன கனடாவின் பழங்குடி கலைப்பொருள்கள்



வத்திக்கான் அருங்காட்சியகங்களில் நூறாண்டுகளுக்கும் மேலாகப் பாதுகாக்கப்பட்டு வந்த, கனடாவின் பழங்குடி சமூகங்களுக்குச் சொந்தமான 62 கலைப்பொருள்கள் திருப்பி ஒப்படைக்கப்பட்டன.

இந்தத் தொல்பொருட்களில் இனுவிட் படகு, வாம்பம் பட்டிகள், போர் ஆயுதங்கள் மற்றும் முகமூடிகள் உள்ளிட்ட முக்கியப் பொருள்கள் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவில் கத்தோலிக்க பாடசாலைகளில் கலாசார அடக்குமுறை மற்றும் துஷ்பிரயோகம் நடந்த காலகட்டத்தில், கத்தோலிக்க திருப்பணியாளர்களால் இந்தப் பொருள்கள் வத்திக்கானுக்கு அனுப்பப்பட்டன.

அவற்றில் இனுவிட் படகு, 1925 ஆம் ஆண்டு வத்திக்கான் மிஷனரி கண்காட்சிக்காக அனுப்பப்பட்டதாகும்.

2022 ஆம் ஆண்டு மறைந்த திருத்தந்தை பிரான்சிஸ், கத்தோலிக்க பாடசாலைகளில் நடந்த துஷ்பிரயோகங்களுக்கு இனப்படுகொலை என்று மன்னிப்புக் கோரியதைத் தொடர்ந்தே, இந்தக் கலாசார முக்கியத்துவம் வாய்ந்த பொருள்களைத் திரும்பப் பெறுவதற்கான கோரிக்கை வலுப்பெற்றது.

இந்த 62 பொருள்களை, சகோதரத்துவத்தின் ஒரு அடையாளம் என்று குறிப்பிட்டு வத்திக்கான், கனடாவின் கத்தோலிக்க ஆயர்களிடம் ஒப்படைத்தது.

ஆயர்கள் இவற்றை தேசிய பழங்குடி அமைப்புகளிடம் கையளித்து, அவை சொந்த சமூகங்களிடம் சேர்ப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

ஆயினும், சில பழங்குடித் தலைவர்கள், இந்தக் கலைப்பொருள்களை நேரடியாகத் தங்களிடம் ஒப்படைக்காமல், திருச்சபையிலிருந்து திருச்சபைக்கு ஒப்படைக்கப்படுவது குறித்து விமர்சனம் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும், கனடாவின் வெளிவிவகார அமைச்சர் அனிதா ஆனந்த், இது நல்லிணக்கம் நோக்கிய ஒரு முக்கியமான படி என்று வரவேற்பு தெரிவித்துள்ளார்.

கனடாவில் 19-ஆம் நூற்றாண்டு முதல் 20-ஆம் நூற்றாண்டு இறுதி வரை சுமார் 150,000-க்கும் மேற்பட்ட பழங்குடி சிறுவர்கள் கத்தோலிக்க உண்டுறைப் பாடசாலைகளுக்கு கட்டாயமாக அனுப்பப்பட்டனர்.

இந்தப் பாடசாலைகளின் முக்கிய நோக்கம், பழங்குடி சிறுவர்களை அவர்களின் சொந்த மொழி, கலாசாரம் மற்றும் பாரம்பரியங்களிலிருந்து பிரித்து, அவர்களை வலுக்கட்டாயமாக ஐரோப்பிய-கனேடிய கலாசாரத்தில் "ஒருங்கிணைப்பதாகும்." இதன் விளைவாக, இந்தப் பாடசாலைகளில் படித்த சிறுவர்கள் மீது ஆசிரியர்கள் மற்றும் திருச்சபை ஊழியர்களால் உடல் ரீதியான மற்றும் மன ரீதியான வன்முறைகள் பரவலாக இழைக்கப்பட்டதாக வரலாற்று குறிப்புகள் தெரிவிக்கின்றன.

மோசமான சுகாதார நிலைமைகள் மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக ஆயிரக்கணக்கான சிறுவரக்ள் இறந்தனர் எனவும் மேலும் பலர் புதைகுழிகளில் பெயரின்றி அடக்கம் செய்யப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாடசாலை நடவடிக்கைகள் ஒரு கலாசார இனப்படுகொலை என்று வர்ணிக்கப்படுகின்றன. இந்த வரலாற்றுத் தவற்றுக்காக, 2022 ஆம் ஆண்டு மறைந்த திருத்தந்தை பிரான்சிஸ் கனடாவுக்குச் சென்று கத்தோலிக்க திருச்சபையின் பங்குக்காக வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னிப்புக் கோரினார்.

---

**கனேடிய...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முழுமையான பாதுகாப்பு அல்ல என்று கூறி, நீதிமன்றம் எக்ஸ் நிறுவனத்துக்கு 100,000 டொலர் அபராதம் விதித்தது.

உலகளவில் ஒரு படத்தை நீக்க உத்தரவிடுவது, மற்ற நாடுகளின் சட்ட அதிகாரத்தை மீறுவதாகும் என்றும், இது உலகெங்கிலும் உள்ள பேச்சுரிமைக்கு அச்சுறுத்தல் என்றும் எக்ஸ் நிறுவனம் கூறி, அபராதத்துக்கு எதிராக வழக்குப் பதிவு செய்துள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் சட்டமா அதிபர் நிகி ஷர்மா, "பாதிக்கப்பட்டவர்களுக்கு உண்மையான பாதுகாப்புக் கிடைக்க, இந்தப் படம் விதிவிலக்கு இல்லாமல் நீக்கப்பட வேண்டும். கனடாவில் மட்டும் தடுப்பது போதாது," என்று கூறி, எக்ஸ் நிறுவனத்தின் சவாலை எதிர்த்து வழக்கில் இணையவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

**குளிர்காலத்தில்**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலை, கனேடியர்கள் உள்நாட்டுச் சுற்றுலாவை நாட வழிவகுத்ததால், கனடாவின் சுற்றுலாத்துறை சாதனை படைத்து 59 பில்லியன் கனேடிய டொலரை ஈட்டியுள்ளது.

அதே சமயம், சில ஓய்வுபெற்ற கனேடியர்கள் அரசியல் பதற்றம் காரணமாக அமெரிக்காவில் உள்ள தங்கள் குளிர்கால வீடுகளை விற்றுவிட்டனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# தொலைதூரத்திலிருந்து ரோபோ மூலம் சிகிச்சை

## கனடிய மருத்துவர்கள் சாதனை

தொலைதூரத்தில் இருக்கும் நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்கி கனடிய மருத்துவர்கள் சாதனையை நிலைநாட்டியுள்ளனர்.

டொராண்டோவின் புனித மைக்கல்ஸ் மருத்துவமனையின் மருத்துவக் குழு இந்த சாதனையை படைத்துள்ளது.

ரோபோக்களை தொலைவிலிருந்து கட்டுப்படுத்தி சுமார் 10 மூளை அஞ்சியோ கிராம் சிகிச்சைகளை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது மருத்துவத்துறையில் ஒரு புதிய உலக சாதனை என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த சாதனை எதிர்காலத்தில் தூர பகுதிகளில் இருக்கும் நோயாளிகளுக்கு அவசர பக்கவாத சிகிச்சையை உடனடியாக மேற்கொள்வதற்கு வழிவகுக்கும் என நிபுணர்கள் கூறுகின்றனர்.

மூளை அஞ்சியோகிராம் என்பது மிகக் குறைந்த துளையீட்டுக்குரிய சிகிச்சை முறையாகும்.

மருத்துவர்கள் முன்புறத்திலிருந்து (groin) femoral arteryயில் கத்தீட்டரை நுழைத்து அதை இரத்த நாளங்கள் வழியாக மூளைக்குச் செலுத்துகின்றனர்.

பின்னர் கொன்ஸ்ட்ராட் il contrast dye ஊற்றி எக்ஸ் கதிர் மூலம் இரத்த நாளங்களில் பிரச்சினைகள் உள்ளதா என்பதை கண்டறிகின்றனர்.

ஆனால் இத்திட்டத்தில் மருத்துவர் விடொர் மெண்டாஸ் பெரய்ரா என்பவர் தொலை தூரத்தில் இருந்தவாறே ஒரு கணினி மூலம் ரோபோவை தூரத்திலிருந்து கட்டுப்படுத்தி இந்த சிகிச்சையை மேற்கொண்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# விலங்குகளை சித்திரவதை செய்து கொலை செய்யும் கனேடியத் தம்பதி

கனடாவை சேர்ந்த தம்பதியினர், விலங்குகளை சித்திரவதை செய்து கொலை செய்யும் காணொலிகளை உருவாக்கி, அவற்றை ஒரு செய்திப் பரிமாற்ற செயலி மூலம் விற்ற வழக்கில், பல விலங்குக் கொடுமைக் குற்றச்சாட்டுகளை ஒப்புக்கொண்டுள்ளனர்.

இந்தக் கொடூரச் செயலில் 90 க்கும் மேற்பட்ட பூனைகள், பறவைகள் மற்றும் ஆக்சோலாட்டல் போன்ற விலங்குகள் சம்பந்தப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு ஒக்டோபர் 2024 இல், கால்நடை மருத்துவருக்கு கிடைத்த தகவல் மூலம் இந்தத் தம்பதியினர் கைது செய்யப்பட்டனர்.

'Goddess May Barefoot Premium Crush' என்ற பெயரில் 100 க்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட டெலிகிராம் குழுவில், விலங்குகளை நசுக்கிக் கொல்லும் காணொளிகள் விற்கப்பட்டதாகவும் பகிரப்பட்டதாகவும் அரச குற்றவியல் சட்டத்தரணி பாய்ட் மெக்கில் வினிபெக் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

வெறுங்கால்களால் விலங்குகளை நசுக்கிக் கொன்றதாகவும், அதைக் காணொலியாகப் பதிவு செய்ததாகவும், அதில் பெரும்பாலும் பாலியல் ரீதியான



அம்சங்கள் இருந்தன எனவும் மெக்கில் கூறினார்.

இந்தக் காணொலிகள் 'டார்க் வெப்' பில் வெளியிடப்பட்டதாகவும், விலங்குகளைக் கொல்வதற்கான விலைப் பட்டியலும் இருந்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதில் ஒரு சிறிய எலிக்கு 5 டொலர் முதல் மூன்று பூனைக் குட்டிகள் கொண்ட குடும்பத்திற்கு 180 டொலர் வரை விலை நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

குற்றவாளிகள் இருவரும் தலா ஆறு விலங்குக் கொடுமைக் குற்றச்சாட்டுகளை ஒப்புக்கொண்டனர்.

குற்றவாளிகளின் மின்னணு சாதனங்களைப் பரிசோதித்ததில், விலங்குகள் கொல்லப்படும் பல காணொளிகள் மற்றும் அவர்களின் நடத்தையை அதிகரிக்கத் திட்டமிடுவது தொடர்பான உரையாடல்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

கைப்பற்றப்பட்ட லிமாவின் நாட்குறிப்பில், "தனது கால்களால் உயிர்களைக் கொல்வது எவ்வளவு பிடிக்கும், அது தனக்கு அளிக்கும் இன்பம்" குறித்தும் எழுதப்பட்டிருந்தது.

மே 2024 முதல் ஒக்டோபர் 2024 வரை இந்தக் காணொலிகள் மூலம் சுமார் 2,800 டொலர் இலாபம் ஈட்டப்பட்டுள்ளது என தெரியவந்துள்ளது.

சட்டத்துறையினர் மதிப்பாய்வு செய்த ஆதாரங்களில், 60-க்கும் மேற்பட்ட பூனைகள், ஏழு பறவைகள், ஆறு முயல்கள், ஒரு தவளை மற்றும் ஒரு ஆக்சோலாட்டல் உட்பட 97-க்கும் மேற்பட்ட விலங்குகள் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டன என தெரியவந்துள்ளது.

இருவரும் தற்போது நீதிமன்றக் காவலில் உள்ளனர்.

நீதிமன்ற உத்தரவின் பேரில் நடத்தப்படும் முந்தைய தண்டனை அறிக்கைகள் முடிவடைந்த பிறகு, அவர்களுக்குத் தண்டனை விதிக்கப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.